*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.ராம்ராஜ் த/பெ. சகாதேவன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.06.2025.**

துவக்க நேரம் 12.50 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள். எங்களுக்கு நீதிமன்றத்தின் மூலமாக மூன்றில் ஒரு பங்கு நிலம் தீர்ப்பாகி நாங்கள் ஓட்டிவந்தோம். அந்த நிலத்தை நான் ஓட்டக்கூடாது என்றும், எனக்கு தரக்கூடாது என்றும் எனது தங்கை செல்வராணி, என்னிடம் தகராறு செய்து வந்தார்.

2) கடந்த 26.01.2023 அன்று காலை 11.30 மணியளவில் நான், எனது மனைவி அமுதா, எனது மகன் பெருமாள் ஆகியோர்கள் இருந்தோம். அப்பொழுது சுமதி, டிராக்டரை எனக்கு பாகம் பிரிந்த நிலத்தின் வழியாக ஓட்டிவந்தார். நான் எனது பாகத்தின் வழியாக வாகனத்தை விடமாட்டேன் என்று சொன்னேன்.

3) அதற்கு செல்வராணி கிழங்கு குச்சியை எடுத்துவந்து, எனது முதுகின் மீது அடித்தார். எதிரி சுமதி கல்லை எடுத்துவந்து, எனது இடதுகாலின் மீது போட்டுவிட்டார். வெங்கட்ராமன் கொடுவாளால், எனது தலையின்மீது வெட்டிவிட்டார். பெரியசாமி தடியால், எனது மண்டையில் அடித்துவிட்டார்.

4) அப்பொழுது தடுக்க வந்த எனது மருமகன் முத்தையனையும், எதிரி பெரியசாமி தடியால் அடித்துவிட்டார். வெங்கட்ராமன் கொடுவாளால், எனது மருமகனின் தலையில் வெட்டிவிட்டார். அப்பொழுது தடுக்க வந்த எனது மகன் பெருமாளையும், பெரியசாமி உருட்டு தடியால், எனது மகனின் தலையில் அடித்துவிட்டார்.

5) காயம்பட்ட எங்கள் மூவரையும் அங்கிருந்தவர்கள் தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துவந்து, முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் வந்து சேர்ந்தோம்.

6) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எதிரி செல்வராணி, எனது தங்கச்சி என்றால் ஆமாம். எனது தங்கச்சிக்கும், ஒரு பங்கு நிலம் பிரிந்துள்ளது என்றால் ஆமாம். எனது தங்கச்சிக்கு பிரிந்த நிலத்தில் அவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் ஆமாம். அந்த நிலத்திற்கு அருகில் சுமதி என்பவருக்கும் நிலம் உள்ளது என்றால் சரிதான்.

2) சுமதி என்பவர் அவரது நிலத்தில் விளைந்த கிழங்கு குச்சிகளை பிடுங்கிக்கொண்டு, செல்வராணியின் நிலத்தின் வழியாகத்தான் வந்தார்கள் என்றால் சரியல்ல, செல்வராணியின் பாக நிலத்திலும் வந்து, எனது நிலத்தின் வழியாக வந்தார்கள்.

3) எனது நிலத்தின் வழியாக சுமதியின் கிழங்கு குச்சியின் வாகனம் செல்லவில்லை என்றும், வழக்கிற்காக என் நிலத்தின் வழியாக சுமதியின் வாகனம் சென்றதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் என்னிடம் எத்தனை கையெழுத்துகள் போலிசார் வாங்கினார்கள் என்றால் கையெழுத்து போட்டேன், எத்தனை கையெழுத்துகள் என்று நியாபகம் இல்லை.

4) எனது எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான், கையெழுத்து மட்டும் போடுவேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல எழுதியதில்தான் நான் கையொப்பம் செய்தேன்.

5) நிலம் சம்மந்தமாக எனக்கும், எனது தங்கை செல்வராணிக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். செல்வராணியின் பங்கு நிலத்தை சுமதிதான் குத்தகைக்கு ஓட்டுகிறார் என்றால் சரிதான். சுமதி அவரது குச்சிக்கிழங்குகளை எடுத்துச்செல்லாமல் அவரை நஷ்டபடுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் செல்வராணியின் காட்டின் வழியாக சென்ற சுமதியின் வாகனத்தை நான் தடுத்தேன் என்றாலும், இந்த வழக்கு சம்பவத்திற்கு நான்தான் காரணம் என்று சொன்னாலும் சரியல்ல, எனது நிலத்தின் வழியாக அவரது வாகனம் செல்லக்கூடாது என்று சொன்னேன்.

6) பெரியசாமி என்பவர் கொடுத்த புகாரில், என்மீதும், பெருமாள் மற்றும் முத்தையன் ஆகியோர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இதே நீதிமன்றத்தில் நடந்து வருகின்றது என்று சொன்னால் என்மீதும், முத்தையன்மீதும்தான் வழக்கு உள்ளது, பெருமாள் மீது வழக்கு இல்லை.

7) என்னை அடிக்க பயன்படுத்தியதாக சொல்லும் தடி மற்றும் குச்சியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எதிரிகள், எங்கள் மீது கொடுத்த வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக வேறு வழியில் ஏற்பட்ட காயத்தை வைத்து, எதிரிகள், என்னை தாக்கியதாக கூறி ஒரு பொய்யான

புகாரினை கொடுத்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தங்கைக்கு பிரிந்த சொத்தை, நான் அபகரிக்கும் நோக்கில் நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.09 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.20 17:44:14 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.முத்தையன் த/பெ. வெங்கட்ராமன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.06.2025.**

துவக்க நேரம் 01.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமராஜ், எனது மாமனார். எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள்.

2) கடந்த 26.01.2023 அன்று காலை 11.30 மணியளவில் நான், எனது மாமனார் ராமராஜ், பெருமாள் மற்றும் எனது மனைவி மீனா ஆகியோர்கள் எங்களது தோட்டத்து வீட்டில் இருந்தோம். அப்பொழுது தோட்டத்திற்கு தண்ணீர் எடுத்து விடுவதற்காக நாங்கள் அனைவரும் சென்றோம். சுமதி, அவரது தோட்டத்தில் இருந்து கிழங்கு புடுங்கிக்கொண்டு டிராக்டர் மூலமாக எனது மாமனாரின் காட்டின் வழியாக ஓட்டிவந்தார்கள்.

3) அதற்கு எனது மாமனார் வெள்ளாம காட்டுல ஏன் வண்டி விடுறிங்க என்று கேட்டதற்கு, எனது அண்ணன் பெரியசாமி நான் அப்படிதான் விடுவேன் என்று அசிங்கமாக பேசினார். அதை நான் கேட்டதற்கு பெரியசாமி குச்சியால், எனது கையிலும், முதுகிலும் அடித்தார். எனது அப்பா வெங்கட்ராமன் கொடுவா கத்தியால் வீச முற்படும்பொழுது நான் கீழே குனிந்து நிமிரும்பொழுது எனது இடதுபக்க தலையில் கொடுவா கத்தி பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. (சாட்சி

தனது இடதுபக்க தலையை காண்பித்து சாட்சியம் அளித்தார்). மேலும் எதிரிகள், என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். எனது மாமனாரை, பெரியசாமி தடியால் அவரது தலையிலும், முதுகிலும் அடித்துவிட்டார். வெங்கட்ராமன் கத்தியால், எனது மாமனாரின் தலையில் வெட்டிவிட்டார்.

4) அப்பொழுது தடுக்க வந்த பெருமாளை, பெரியசாமி தடியால் அடித்துவிட்டார். காயம்பட்ட எங்கள் மூவரையும் அங்கிருந்தவர்கள் தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துசென்று, முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் வந்து சேர்ந்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எதிரி பெரியசாமி, எனது அண்ணன் என்றால் ஆமாம். எதிரி வெங்கட்ராமன், எனது அப்பா என்றால் ஆமாம். நான், எனது மாமனார் வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் இல்லை, வாடகை வீட்டில் எனது மாமனார் வீட்டிற்கு அருகில் குடியிருக்கிறேன். எனது மாமனாரின் தங்கச்சிதான், எதிரி செல்வராணி என்றால் ஆமாம். செல்வராணிக்கும் அந்த இடத்தில் விவசாய நிலம் உள்ளது என்றால் ஆமாம். அந்த நிலத்திற்கு அருகில் சுமதி என்பவருக்கும் நிலம் உள்ளது என்றால் சரிதான்.

2) சுமதி என்பவர் அவரது நிலத்தில் விளைந்த கிழங்கு குச்சிகளை பிடுங்கிக்கொண்டு, செல்வராணியின் நிலத்தின் வழியாகத்தான் வந்தார்கள் என்றும், எனது மாமனாரின் காட்டின் வழியாக வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, நாங்கள் வெள்ளாமை வைத்த காட்டின் வழியாக சென்றதால்தான் வழிமறித்து கேட்டோம்.

3) போலிசார், என்னை விசாரித்தபொழுது, வெள்ளாமை காடு என்று நான் சொல்லவில்லை என்றும், தற்பொழுதான் முதல்முறையாக சொல்கிறேன்

என்றும் சொன்னால் சரிதான். செல்வராணியின் பாக நிலத்தை, எனது மாமனார் எங்களுக்கு வாங்கி கொடுத்துவிடவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், எனது மாமனார், எதிரிகள் மீது பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) எனது மாமனாருடன் உடன்பிறந்த சகோதரர் குணசேகரன் என்று சொன்னால் சரிதான். குணசேகரனுக்கு பிரிந்த பாகத்தை, எதிரி சுமதி வாங்கிக்கொண்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார் குணசேகரனுக்கு பிரிந்த பாகத்தை வாங்க முயற்சி செய்து, அது தோல்வியடைந்ததால், எதிரிகளுடன் சண்டையிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

5) சம்பவத்தை நான் நேரில் பார்க்காமல், சண்டையை விலக்க சென்றபொழுது கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டு அதை பயன்படுத்தி எதிரிகளுக்கெதிராக எனது மாமனார் கொடுத்த வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்தபொழுது, போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள்.

6) எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் கையெழுத்து போடுவேன். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 01.30 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.06.20 17:44:21 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-4)***

*Name / Father's Name:* ***திருமதி.அமுதா க/பெ. ராமராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.06.2025.**

துவக்க நேரம் 01.31 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள ஈச்சோடை புதுாரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி ராமராஜ், எனது கணவர். சாட்சி முத்தையன், எனது மருமகன். எதிரிகளை தெரியும், எனது உறவினர்கள்.

2) கடந்த 26.01.2023 அன்று காலை 09.00 மணியளவில் தோட்டத்தி' வேலை செய்வதற்காக எனது மகன், மகள் மற்றும் மருமகள் ஆகியோர் சென்றார்கள். நான் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு அன்று காலை 11.00 மணிக்கு சென்றேன். சுமதி, அவரது தோட்டத்தில் இருந்து கிழங்கு புடுங்கிக்கொண்டு டிராக்டர் மூலமாக எங்களுக்கு பாகம் பிரிந்த நிலத்தின் வழியாக ஓட்டிவந்தார்கள்.

3) அதற்கு நானும், எனது கணவரும், எங்க காட்டு வழியா ஓட்டிவராதிங்க எங்களுக்கும், சுமதிக்கும் இடையே பிரச்சனை உள்ளது என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, சுமதி, செல்வராணி, வெங்கட்ராமன், பெரியசாமி ஆகிய நான்குபேரும் அங்கு வந்தார்கள். சுமதி இவங்கள கொல்லுங்கடா இவங்கள இனிமே விடக்கூடாது என்று பேசிக்கொண்டே

இருக்கும்பொழுது, பெரியசாமி கொடுவாளால் எனது மண்டையின் மீது வெட்டிவிட்டார். எனது மகனின் தலையின்மீது, பெரியசாமி குச்சியால் அடித்துவிட்டார். எதிரி வெங்கட்ராமன், முத்தையனை குச்சியால் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார்.

4) உடனே பக்கத்து காட்டுக்காரர்கள் உதவியுடன் தம்மம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அடிவட்டவர்களை அழைத்துசெல்லும் வழியில் தம்மம்பட்டி காவல் நிலையம் சென்று தகவல் தெரிவித்துவிட்டு, பிறகு மருத்துவமனைக்கு சென்று, முதலுதவி சிகிச்சை கொடுக்கப்பட்டு, பிறகு மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சின் மூலமாக சென்று சேர்த்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எனது வீட்டிற்கும், தகராறு நடந்த இடத்திற்கும் இடையே அரை கி.மீ துாரம் இருக்குமா என்றால் இருக்கும். எனது கணவரும், எனது மகனும் காலையிலேயே தோட்டத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் ஆமாம். அதன் பிறகு நான் சாப்பாடு செய்து எடுத்துச்சென்றேனா என்றால் ஆமாம். நான் செல்வதற்கு முன்பாகவே அந்த இடத்தில் தகராறு நடந்து முடிந்துவிட்டது என்றால் ஆமாம்.

2) எதிரி செல்வராணி, எனது நாத்தனார் என்றால் ஆமாம். எங்களது பூர்வீக சொத்து மூன்று பங்காக பிரிந்தது என்றால் ஆமாம். அந்த மூன்று பங்கில், செல்வராணி, எனது கணவர், எனது கணவரின் தம்பி ஆகியோர்களுக்கு ஒவ்வொரு பங்கு என்றால் ஆமாம்.

3) எங்களது பங்கு நிலத்தினை தவிர, மீதி இரண்டு பங்கு நிலத்தினையும் எனது கணவர் வாங்க முயற்சித்தார் என்றும், அது கிடைக்காமல் போகவே எனது கணவர், எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால்

சரியல்ல. என்னை, போலிசார் எங்கு விசாரித்தார்கள் அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். போலிசார் பேனாவில் எழுதி, என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம்.

4) இந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும், நான் சம்பவம் நடந்தபொழுது வீட்டில் இருந்தேன் என்றும், எனது கணவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.44 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.20 17:44:27 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 496/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-7)***

*Name / Father's Name:* ***திருமதி.பாப்பாத்தி க/பெ. வெங்கட்ராமன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20.06.2025.**

துவக்க நேரம் 01.45 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி முத்தையன், எனது மகன் ஆவார். சாட்சி ராமராஜ், எனது சம்மந்தி. எதிரி வெங்கட்ராமன், எனது கணவர். எதிரி பெரியசாமி, எனது மகன்.

2) தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் எதிரிகளுக்கும், சாட்சிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டு அது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து, போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து, சண்டை நடந்தது குறித் விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். போலிசார் தயார் செய்த பார்வை மகஜரில் நானும், எனது மருமகள் சூரியாவும் கையெழுத்து செய்தோம்.

3) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

## குறுக்கு விசாரணை

யாரால் இந்த சண்டை நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சண்டை நடந்ததாக கேள்விபட்டேன் என்றும் சொன்னால் சரிதான். போலிசார் வந்து சம்பவயிடத்தில் விசாரணை செய்யவில்லை என்றாலும், எனது சம்மந்தி ராமராஜ்தான் ஒரு வெள்ளைத்தாளில் என்னிடம் கையெழுத்து வாங்கிச்சென்று போலிசாரிடம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல, போலிசார் சம்பவயிடத்தில் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம்.

முடிவு நேரம் 01.51 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.20 17:44:32 +0530

Judicial Magistrate No.2, Attur.